சேலம், தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ)., அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.ப.தமிழ்செல்வி, பி.எஸ்ஸி., (தோ).

செ.மு.ஆ.எண்: அ3 /1964/ 2019 நாள்: 20.02.2020

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2015–16, 2016–17 மற்றும் 2017–18 தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டது – தட்டச்சர் ஆக பணி நியமனம் செய்யப்பட்டது – பணியினை வரன் முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக, வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பணிமேலாண்மை) அவர்களின் செயல் முறை ஆணை எண்.அநிபி3/7551/2019 நாள்.01.03.2019.
2. தோட்டக்கலை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அபபி2/3906/2019 நாள்.05.03.2019

*****

**ஆணை**

பார்வை (1)ல் கண்டுள்ள கூடுதல் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செய்லமுறை ஆணையின் படி தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் தொகுதி IVல் அடங்கிய பணிகளின் கீழ் நடைபெற்ற நேரடி போட்டித்தேர்வின் மூலம் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018ம் ஆண்டிற்கு தட்டச்சர் பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு (Selected Provisionally) சென்னை தோட்டக்கலை இயக்குநர் அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர் பார்வை (2)ல் கண்டுள்ள தோட்டக்கலை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி ரூ.19500–62000 என்ற புதிய ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் தட்டச்சர் ஆக பணிநியமனம் வழங்கிட உத்தரவிடப்பட்டது.

அவற்றினை அடுத்து கீழ்க்காணும் விபரப்படி தட்டச்சர் பதவியில் அவரது பெயருக்கு எதிரே கலம் 6–ல் கண்டுள்ள தேதியில் இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணைய எண் | தேர்வாணைய பதிவு எண் | பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 126 | 170525057 | ம.ஜெகன்,<br>தட்டச்சர்,<br>தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,<br>சேலம். | 07.03.2019<br>முற்பகல் | 07.03.2019<br>முற்பகல் |

மேற்காணும் பணியாளர் தட்டச்சர் பதவியில் மூன்றாண்டுகள் தொடர் பணிகாலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் அமர்த்தியும் ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இப்பணிவரன்முறை உத்தரவு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணய தொகுதி IV (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டிற்கானது)ல் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டது குறித்து சென்னை/ மதுரை உயர் நீதிமன்ற கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்புரைக்கு உட்பட்டது என்ற நிபந்தனையின் பேரில் வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

20.2.2020

தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ),
சேலம்.

பெறுநர்
செல்வன்.ம.ஜெகன்,
தட்டச்சர்,
இவ்வலுவலகம்.

20/2/2020

நகல் : இருப்பு கோப்பு

நகல் : பணிப்பதிவேடு